தலைப்பு 209 - தேசிய சுவடிக்காப்புத் திணைக்களம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 209 – தேசிய சுவடிக்காப்புத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய சுவடிக்காப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய சுவடிக்காப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க பொருண்மையானவை தொடர்ப்பிலும் நியாமான நிலைமையை பிரதிபளிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்கை தயாரிக்கும் அடிப்படை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய 05 ஆம் பக்கம் தொடர்பில் கவணம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்ப பிரமாணம் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் தேசிய சுவடிக்காப்புத் திணைக்களத்தின் பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை தேசிய சுவடிக்காப்புத் திணைக்களத்தினதும், பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மட்டும்

நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்ட இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும், உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் தேசிய சுவடிக்காப்புத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் தேசிய சுவடிக்காப்புத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட

மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான இணைக்கக்கூற்று

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண "பீ" கணக்கில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 20,297,664 தொகை எனினும், 2024 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 20,285,893 தொகை என காட்டப்பட்டிருந்தது. அதன்படி, வித்தியாசம் ரூபா 11,772 தொகையாக காணப்பட்டது.	2023 மற்றும் 2024 ஆண்டுகளில் இந்த வித்தியாசத்தை இனங்கண்டிருந்ததுடன், அந்த வித்தியாசம் ஏற்பட்ட முறையினை இதுவரை கண்டறிய முடியாமல் இருந்தமையால் இது தொடர்பாக தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது.	ரூபா 11,772 இற்கான வித்தியாசத்தை இனங்கண்டு சரி செய்ய வேண்டும் என.

(ஆ) ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	கொம்டிரோலர் ஜனரால் அலுவலகத்தினால் 2018 திசெம்பர் 31 திகதி வழங்கியிருந்த நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்யும் வழிகாட்டலின் பிரிவு 1.3.1 இற்கு இணங்க அனைத்து வாகனங்களுக்குமாக 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளல் கட்டாயமாக இருந்த போதிலும், திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்யாமல் ரூபா 17,484,320 தொகை என மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.	சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கைக்கு இணங்க திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக பெறுமதி மதிப்பீட்டுச் சபையொன்றினை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	கொம்டிரோலர் ஜனரால் அலுவலகத்தினால் 2018 திசெம்பர் 31 திகதி வழங்கியிருந்த நிதி அல்லாத சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்யும் வழிகாட்டலின் அறிவுரைக்கு இணங்க நடவடிக்கை எடுத்து பெறுமதிப்பீடு மதிப்பீட்டுப் பெறுமதிகள் காட்டப்பட வேண்டும் என.
(ii)	2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்கு வழிகாட்டல் இலக்கம் 06/2024 இன் பந்தி 8.2 இற்கு இணங்க தொடர்ந்தும் அறிவிக்கப்பட வேண்டிய நிதி அல்லாத சொத்துக்கள் காணப்படின், அவற்றை கிரயத்திற்கு அல்லது கிரயத்தை கண்டறிய முடியாத சந்தர்ப்பங்களில் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தின் கண்டி கிளை அலுவலத்தின் காணி மற்றும் கட்டிடம் அவ்வாறு கணக்கீடு செய்திருக்கவில்லை.	இந்த திணைக்களத்திற்கு சொந்தமான கண்டி அலுவலத்தின் காணி மற்றும் கட்டிடத்தை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு 2024.12.19 திகதி மற்றும் 2024.11.29 திகதிகளில் கடிதங்களின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது.	நிதி அல்லாத சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	திணைக்களத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடம் ரூபா 3,668,702,000 இற்காக பெறுமதி மதிப்பீடு செய்து 2024 ஏப்ரல் 17 திகதி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை வழங்கியிருந்த போதிலும், மீளாய்வாண்டிலும் அந்த காணி மற்றும் கட்டிடத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	திணைக்களத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடம் தொடர்பாக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுமதியின் படி 2025 பெப்ரவரி மாத கணக்குப் பொழிப்பின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டிருந்தது.	தொடர்ந்தும் அறிவிக்கப்பட வேண்டிய நிதி அல்லாத சொத்துக்கள் காணப்படின் கிரயத்திற்கு அல்லது பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதிக்கு கணக்கீடு செய்ய வேண்டும்.

(இ) கட்டுநிதி மீதி

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தேர்தல் திணைக்களத்தினால் தீர்க்கப்பட வேண்டிக் காணப்பட்ட கட்டுநிதி மீதி ரூபா 423,825 இற்கான பெறுமதி 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றில் பணத்தின் தேறிய மாற்றத்தின் கீழ் குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும், செயற்பாட்டுத் தொழிற்பாடுகள் மூலம் உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் ஏனைய செலவுத் தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு என பதியப்பட்டிருந்ததுடன், 2024 ஆண்டிற்காக கட்டுநிதி கணக்கு தொடர்பான கூற்றில்(ACA-3) இந்தப் பெறுமதி தீர்க்கப்பட்டிருந்தால், அது பற்றியும், அவ்வாறன்றேல் தீர்க்கப்படாமைக்கான காரணம் குறித்தலின் கீழும் குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி பதிவு செய்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் அவ்வாறான தீர்க்கப்படாத முற்பணங்கள் (தேர்தல்), சரியாக பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், 2025.02.28 திகதி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட திகதியளவில் அந்த ரூபா 423,825 தொகை தீர்க்கப்படாத முற்பணம் காணப்பட்ட போதிலும், 2025 மார்ச் மாதத்திற்கான கணக்குப் பொழிப்பின் மூலம் அது தீர்க்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது.	சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் என.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 செலவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	முறையான ஆய்வொன்றுடன் மதிப்பீடு தயாரிக்கப்படாமையினால் 15 மீண்டுவரும் செலவு விடயங்களின் தேறிய ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 49,044,974	15 செலவு விடயங்களுக்காக ஏற்பாடுகளின் சேமிப்பு ரூபா 32,820,393 தொகை என காட்டப்பட்டிருந்த போதிலும், பொறுப்புக்களை கழித்த பின்னர்	முறையான ஆய்வொன்றுடன் மதிப்பீடுகள் தயாரிக்கபட வேண்டும் என.

	தொகையாக காணப்பட்டதுடன், செலவு ரூபா 16,224,580 தொகை மற்றும் ஏற்பாடுகளின் சேமிப்பு ரூபா 32,820,393 தொகையாக காணப்பட்டது. அந்தச் சேமிப்பு தேறிய ஏற்பாடுகளில் 20 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையான வீச்சொன்றில் காணப்பட்டது.	மீதி 5 சதவீதத்திலிருந்து 79 சதவீதம் வரை வித்தியாசப்படுகின்றது என அறிவிக்கப்பட்டிருந்தது.	
(ஆ)	09 மூலதனச் செலவு விடயங்களின் மொத்த தேறிய ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 1,101,200,000 தொகையாக காணப்பட்டதுடன், செலவு ரூபா 254,727,668 தொகை மற்றும் ஏற்பாடுகளின் சேமிப்பு ரூபா 846,472,331 தொகையாக காணப்பட்டது. அந்தச் சேமிப்பு தேறிய ஏற்பாடுகளின் 23 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சொன்றினை கொண்டிருந்தது.	மதிப்பீட்டுத் திருத்தம் மற்றும் ஒப்பந்த காலம் நீடித்தல் எதிர்பாரத்தவாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை, 01/2024 இன் படி செலவுக் கட்டுப்பாட்டின் காரணமாக ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன என அறிவிக்கப்பட்டிருந்தது.	முறையான ஆய்வொன்றுடன் மதிப்பீடுகள் தயாரிக்கபட வேண்டும் என.
(இ)	02 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,500,000 தொகைக்கான ஒட்டுமொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது.	செலவு மேற்கொள்ளப்படுவதற்கான சந்தர்ப்பம் ஒன்று ஏற்படாமை. செலவுகளை வரையறுத்தல், உடன்படிக்கை அலுவல்கள் ஆரம்பிக்கப்படாமை போன்ற காரணங்களினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது.	முறையான ஆய்வொன்றுடன் மதிப்பீடுகள் தயாரிக்கபட வேண்டும் என.
(ஈ)	03 மூலதனச் செலவு விடயங்களுக்கான ஏற்பாடுகள் ரூபா 123,500,000 தொகை ஒட்டுமொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது.	செலவு மேற்கொள்ளப்படுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படாமை. செலவுகளை வரையறுத்தல், உடன்படிக்கை அலுவல்கள் ஆரம்பிக்கப்படாமை போன்ற காரணங்களினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது.	முறையான ஆய்வொன்றுடன் மதிப்பீடுகள் தயாரிக்கபட வேண்டும் என.
(உ)	209-1-1-1409-138/11 செலவு விடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,000,000 தொகை மற்றும் ஆண்டின் போது நிதிப் பிரமாணங்கள் 66 இன் மூலம் ரூபா 7,699,406 தொகை மாற்றப்பட்டிருந்ததுடன், ரூபா 9,699,406 தொகைக்கான தேறிய ஏற்பாடுகளில் ரூபா 2,131,262 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, நிதிப் பிரமாணம் 66 மாற்றங்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் வருட இறுதியளவிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும், மொத்த தேறிய ஏற்பாடுகளின் சதவீதமொன்றென சேமிப்பு 78 சதவீதமாக காணப்பட்டது.	209-1-1-1409(138) செலவு விடயத்தின் கீழ் 2024.12.31 திகதியி உள்ளவாறு மொத்த தேறிய ஏற்பாடுகளின் சதவீதம் என, மீதி ஏற்பாடுகளில் 78 சதவீதம் என கணக்காய்வில் கண்டறிந்த போதிலும், 2024.12.31 திகதியில் உள்ளவாறு பொறுப்புக்கள் என ரூபா 4,558,790 இற்கான ஏற்பாடொன்று பொறுப்புக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, சேமிப்பின் சதவீதம் 31 சதவீதம் என சுட்டிக் காட்டியிருந்தேன்.	முறையான ஆய்வொன்றுடன் மதிப்பீடுகள் தயாரிக்கபட வேண்டும் என.

3.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஒரு மீண்டுவரும் செலவு விடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 700,000 தொகையில் ரூபா 682,277 தொகை செலவிடப்பட்ட பின்னர் ரூபா 17,723 தொகை சேமிக்கபட்டிருந்த போதிலும், அந்த சேமிப்பை மிகைத்து ரூபா 2,532,328 இற்கான பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது.	2022 ஆண்டிற்குரிய பொறுப்பொன்றாகும், அதனை 2024 ஆண்டின் பொறுப்புக்கள் கூற்றிலிருந்து அகற்றப்படாமையினால் மேலும், 2024 ஆண்டில் பொறுப்பொன்றென காட்டப்பட்டுள்ளது. 2025 ஆண்டு ஏப்ரல் மாதம் CIGAS கணக்கீட்டுப் பக்கேஜின் மூலம் இந்தப் பொறுப்பு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் என.
(ஆ)	அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 06/2024 இன் படி பொறுப்புக்கள் தொடர்பான கூற்று (i) – (இணைப்பு iv) படிவம் பூர்த்தி செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.	அடுத்த ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 06/2024 இன் படி பொறுப்புக்கள் தொடர்பான கூற்று (i) – (இணைப்பு iv) படிவம் உரிய முறையில் நிரப்பப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் 06/2024 இன் படி மேற்கொள்ளப்பட வேண்டும் என.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

அவதானிப்புக்கள்			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	பெறுமதி ரூபா	இணங்காமைகள்		
இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பந்திகள் 4.5 மற்றும் 4.6 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 3.1 இன் மூலம் வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம்	254,876	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சேவையை விட்டுச் சென்ற ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 254,876 தொகைக்கான கடன் மீதியை சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தற்போது சேவையை விட்டுச் சென்றுள்ள 04 உத்தியோகத்தர்களிடம் இடர் கடன் / விஷேட முற்பணம் மற்றும் விழா முற்பணம் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், ரூபா 25,000 இற்கு குறைந்த கடன் காணப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களின் கடன் அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2024(1) இற்கு இணங்க	முற்பண "பீ" கணக்கிற்குரிய நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என.

113(6) மற்றும் வழிகாட்டல் இலக்கம் 01 இன் (உ) மற்றும் (ஊ)		பதிவளிப்பதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய இரண்டு உத்தியோகதர்களின் தனிப்பட்ட முகவரிக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணிப் பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திணைக்களத்தின் தலைமை அலுவகத்திற்கான நடமாடும் ஏந்தாணை முறைமையொன்று நிறுவுவதற்காக 2024 ஆம் ஆண்டில் மதிப்பீட்:டு ஏற்பாடுகள் ரூபா 543,000,000 தொகை காணப்பட்டதுடன், ஆண்டின் போது ரூபா 126,875,685 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2024 ஜூன் மாதம் 12 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இலக்கம் அமப/24/0906/620/015-1 மற்றும் 24(ii)(ஆ) இன் படி இந்த செயற்திட்டம் 2024 ஆண்டிற்கான ஏற்பாடுகளின் மூலம் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், இந்த செயற்திட்டத்திற்காக 2024 பெப்ரவரி 15 திகதி முதல் 2024 நவம்பர் 07 திகதி வரை பல தடவைகள் விலைகூறல்கள் அழைக்கப்பட்டு 2024 திசெம்பர் 10 திகதி ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டு, 2024 திசெம்பர் 24 திகதி முற்பணக் கொடுப்பனவு ஒன்று மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தை செயற்படுத்தும்	2023 ஆண்டில் சந்தையில் பண்டங்களின் விலை அதிகரித்த காரணத்தினால் மதிப்பீடு திருத்தப்பட்டதுடன், அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நேரிட்டது. அதன்படி, 2024 ஆண்டு பெப்ரவரி 15 திகதி விலைகூறல் ஒன்று அழைக்கப்பட்டதுடன், அந்த விலைகூறல் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டமையால் 2024.09.26 திகதி மீண்டும் விலைகூறல் அழைப்பு மேற்கொண்டு Tudawe Engineering Services (Pvt) Limited இற்கு தற்போது வழங்கப்பட்டு அதன் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. தற்போதைய நிதிசார் முன்னேற்றம் ரூபா 132.64 மில்லியன் தொகை என அறிவிக்கப்பட்டிருந்தது.	நடமாடும் ஏந்தாணைகள் முறைமை நிறுவும் செயற்திட்டம் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும் என.

	பொறுப்பு தேசிய சுவடிக்கூட பணிப்பாளர் (நிருவாகம்) இற்கு சாட்டப்பட்டிருந்த போதிலும், இந்த அபிவிருத்தி செயற்திட்டத்தில் நிதிசார் முன்னேற்றம் 23 சதவீதம் மற்றும் பௌதீக முன்னேற்றமொன்று காணப்படவில்லை.		
(ஆ)	திணைக்களத்தின் பிரதான கட்டத்தை மறுசீரமைத்து மத்திய வாயு சீராக்கல் தீயணைப்பு மற்றும் உயர்மட்ட பாதுகாப்பு முறைமைகளை நிறுவுவதற்காக 2018 திசெம்பர் 26 திகதி ஒப்பந்த வேலை வழங்கப்பட்டு மறுசீரமைப்பு அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், செயற்திட்டத்தின் நிர்மாண வேலை அலுவல்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. 2024 மே 28 திகதி அமைச்சரவை தீர்மானத்தின் படி 2026 திசெம்பர் 31 திகதி வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன், அறுதியான கால சட்டகத்தினுள் வேலையை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கும் படி கட்டளையிடப்பட்டிருந்து. மீளாய்வாண்டின் மதிப்பீட்டு ஏற்பாடுகள் ரூபா 550,000,000 தொகையில் ஆண்டின் போது ரூபா 123,195,665 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தமையால் நிதிசார் முன்னேற்றம் சுமார் 22 சதவீதமாக காணப்பட்டது.	திருத்திய மதிப்பீடு மற்றும் ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்குரிய அமைச்சரவை தீர்மானம் கிடைத்த பின்னர் பிரதான கட்டிடத்தின் மறுசீரமைப்பு அலுவல்கள் 2024 ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2024 ஆண்டிற்காக மதிப்பீட்டு ஏற்பாடுகளில் ரூபா 123,145,665 தொகை மாத்திரம் பயன்படுத்துவதற்கு நேரிட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது.	பிரதான கட்டிடத்தின் மறுசீரமைப்பு அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும் என.
(இ)	நம்பகத்தன்மையுள்ள டிஜிதல் களஞ்சியமொன்று நிறுவுவதற்காக 2021 ஏப்ரல் 20 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 120,000,000 தொகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. Atom மற்றும் Archivematica ஆகிய மென்பொருட்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் வெளிநாட்டு	தேசிய சுவடிக்கூடத்தில் நம்பகத்தன்மையுள்ள டிஜிதல் களஞ்சியமொன்று நிறுவுதல் (கட்டம் 01), செயற்திட்டத்தின் திருத்திய பாதீடுடனான செயற்திட்ட யோசனை திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானத்தின் படி தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு 2024.10.07 திகதி அனுப்பப்பட்டிருந்தது. தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் 2024.12.26 திகதி மற்றும் 2025.03.05 திகதிய கடிதங்களின்	நம்பகத்தன்மையுள்ள டிஜிதல் களஞ்சிய முறைமை நிறுவும் செயற்திட்டம் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும் என.

திறன்தொழில் கம்பனியொன்றை தெரிவு செய்வதற்காக சர்வர் கணினி மற்றும் கொள்திறன் பெற்றுக்கொள்வதற்கும் அமைச்சரவைக்கு அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிப்பதற்கும் 2024 ஆகஸ்ட் 28 திகதிய திணைக்கள பெறுகைக் குழு தீர்மானித்திருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி வரையும் அதற்கான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	மூலம் இந்த செயற்திட்ட யோசனை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன்படி, குறிப்பிட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் அமைச்சுக்கு 2025.03.24 திகதி அனுப்பப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது.

4.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் உப பிரிவு 47(4) இற்கு இணங்க வருடாந்த செயலாற்றுகை அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 180 நாட்களில் அல்லது அதற்கு முன்னர் வெளியிடப்பட வேண்டும். 2020 ஆகஸ்ட் 28 திகதி இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 10.2 இற்கு இணங்க அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல் கோவை இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 16(2) பிரகாரம் இந்த செயலாற்றுகை அறிக்கை வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறாயினும், இவ் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 16(2) இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயலாற்றுகை அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க முடியாமை, தகவல்கள் சேகரிப்பதில் ஏற்பட்ட வசதியீனங்களாகும். அதன்படி, அந்தத் தகவல்கள் தாமதமின்றி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	குறிப்பிட்ட விதிமுறைகளின் படி செயலாற்றுகை அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2012 ஆண்டின் போது திணைக்களத்தின் புதிய கட்டிடத்தில் பொறுத்தப்பட்டிருந்த 23 CCTV கமராக்களில் 09 கமராக்கள் மாத்திரம் செயற்படு நிலையில் காணப்பட்டதுடன், செயற்படாத நிலைமையில் காணப்பட்ட 14 கமராக்களை திருத்த மேற்கொள்வதற்கு அல்லது போதியளவு புதிய கமராக்கள் பொறுத்துவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	செயற்படு நிலைமையில் காணப்படும் கமராக்களை அத்தியவசியமான இடங்கள் அடங்கக்கூடியவாறு மீண்டும் பொறுத்தப்பட்டுள்ளதுடன், புதிய கமராக்கல் (03) மற்றும் 02 நெட்வர்க் சுவிச் திருத்த வேலைகள் மேற்கொண்டு பொறுத்தப்பட்டுள்ளது. பிரதான கட்டிடத்துடன் தொடர்புடைய புதிய CCTV முறைமையொன்று பொறுத்துவதற்குரிய திட்டத்தின் வரைபு ஒன்று உசாத்துணை நிறுவனமொன்றுடன் கலந்துரையாடப்பட்டிருந்ததுடன், அதற்கான மதிப்பீடு கிடைத்த பின்னர் 2025 ஆண்டின் மதிப்பீட்டுக் கோரிக்கையில் உட்படுத்தப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது.	திணைக்களத்தில் காணப்படும் ஆதனங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என.

4.4 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்தின் சுவடிகளை வைப்பதற்காக ரூபா 19,237,273 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 2512 அமிலத்துடனான ஆவணங்கள் வைப்புச் செய்யும் பெட்டிகள் குறிக்கோள்சார் கருமங்களுக்காக பயன்படுத்தப்படாமல் அந்தப் பெட்டிகளின்பாதுகாப்பதற்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் 2024 ஜனவரி 29 திகதி முதல் நிதிக்கூற்றின் திகதி வரை களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததெனவும், நடமாடும் ஏந்தாணை முறைமையில் உரிய முறையில் நிறுவி பூர்த்தி செய்வதற்கு முன்னர் அமிலத்துடனான வைப்புப் பெட்டிகள் 2512 கொள்வனவு செய்திருந்தமையால் 05 வருட உத்தரவாத காலத்தில் ஒரு	ஏந்தாணை முறைமை நிறுவுவதில் தாமதமடைந்த காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் மூலம் ஏந்தாணை நிர்மாணிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மேலும், பாரியளவிலான கொள்களன்கள் 24 கிலோ மீற்றர் நீளத்தில் வைக்கப்பட்டுள்ள பழைமை வாய்ந்த சுவடுகள் மற்றும் வெளியீடுகளை வைப்புச் செய்வதற்கு தேவைப்படுகின்றது. அதற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட போது தேவையான கொள்களன்களின் கொள்வனவின் போது இறக்குமதி செய்வதற்கு வழங்குனருக்கு காலம்	பெறுகை தீர்மானங்கள் எடுக்கும் போது முறையான கவனத்துடன் செயற்பட வேண்டும்.

வருடத்திற்கு மிகையான காலம் குறிக்கோள் சார் கருமங்களுக்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்று வைக்கப்பட்டிருந்தமையால் கொள்வனவு செய்யப்பட்ட குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	வழங்கப்பட வேண்டியிருந்தமையால் கொள்வனவு செய்யும் செய்முறை ஏலவே வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

5 நல்லாளுகை

5.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 40(1) இற்கு இணங்க உள்ளகக் கணக்காய்வு அலகொன்று நிறுவி பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும், 2024 மே 01 திகதி முதல் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டமையால் 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் உள்ளகக் கணக்காய்வு பிரிவு செயற்படாது காணப்பட்டது.	அவதானிப்புக்களுடன் இணங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 40(1) இற்கு இணங்க உள்ளகக் கணக்காய்வு அலகொன்று நிறுவப்பட்டு பேணிச் செல்லப்பட வேண்டும் என.

5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2019 ஜனவரி 12 திகதிய DMA/01-2019 இலக்கம் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் காலாண்டிக்கு 01 வீதம் ஆண்டிற்கு குறைந்தது 04 கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது குழுக் கூட்டங்கள் நடாத்தியிருக்கவில்லை.	தற்போது உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்படுவதுடன், அதற்காக உத்தியோகத்தர் ஒருவரை பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யும் படி 2024.08.23 திகதி அமைச்சரவைக்கு கோரிக்கையொன்று அனுப்பப்பட்டது. பொது நிறுவாக அமைச்சின் இணைந்த சேவையின் மனிதவள முகாமைத்துவ முறைமை (MISCO) நாளதுவரை ஆக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது.	சுற்றறிக்கை அறிவுரையின் படி செயற்பட வேண்டும் என.

6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்க்பட்ட பதவியணி 286 தொகை எனினும், அத் திகதியில் உள்ளவாறு உள்ளவாறான பதவியணி 148 தொகையான காணப்பட்டமையால் வெற்றிட எண்ணிக்கை 138 காணப்பட்டது. அவை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 48 சதவீதமாக இருந்தது. இந்த வெற்றிடங்களில் நிறைவேற்று மட்டத்தில் 09 பதவிகளும், மூன்றாம் மட்டத்தில் 15 பதவிகளும், இரண்டாம் மட்டத்தில் 110 பதவிகளும் ஆரம்ப மட்டத்தில் 04 பதவிகளையும் கொண்டிருந்ததுடன் அது திணைக்கள அலுவல்களை பேணிச் செல்வதில் பிரதிகூலமான முறையில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.	2023 நவம்பர் 28 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரத்திற்கு இணங்க வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது.	அத்தியவசிய ஊழியர் வெற்றிடங்களை முக்கியத்துவ அடிப்படையில் நிரப்புவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என.
(ஆ)	தேசிய சுவடிக்கூடப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் (திரைப்பட மற்றும் செவிப்புல கட்புல), தேசிய சுவடிக்கூட பிரதிப் பணிப்பாளர் (இலத்திரனியல் ஆவணங்கள் மற்றும் இலக்கமிடல்), தேசிய சுவடிக்கூட பிரதிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்), உள்ளகக் கணக்காய்வாளர், சிரேஷ்ட சுவடிக் காப்பாளர், பிரதான பாதுகாப்ப உத்தியோகத்தர் (திரைப்படம்), பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் (செவிப்புல கட்புல) பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் (சுவடிகள்), மொழி பெயர்ப்பாளர் ஆகிய திறன்தொழில் உத்தியோகத்தர்களுக்கு கூடிய தட்டுப்பாடு காரணமாக திணைக்களத்தின் சுவடிகள் மற்றும் அறிக்கை முகாமைத்துவம், சுவடிகளுக்கு உட்புகுதல் மற்றும் சுவடிகளின் பாதுகாப்பு ஆகிய பிரதான கருமங்களுக்காக பிரதிகூலமான தாக்கம் ஏற்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.	தேசிய சுவடிக்காப்புத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைத் தரத்திற்காக ஆட்சேர்த்தல் (SL01) தொடர்பாக தொடர் நடவடிக்கை தொடர்பாக பகிரங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் PSC/OPR/GEN/07/2025 மற்றும் 2025.03.07 திகதிய கடிதத்தின் மூலம் தொடர் நடவடிக்கைக்காக கலந்துரையாடப்படுவதுடன் குறிப்பிட்ட ஆட்சேர்ப்பின் பின்னர் திறன்தொழில் உத்தியோகத்தரின் கடும் தட்டுப்பாடு காரணமாக திணைக்களத்தின் சுவடிகள் மற்றும் அறிக்கைகள் முகாமைத்துவம் சுவடிகளுக்கு உட்புகுதல் மற்றும் சுவடிகளின் பாதுகாப்பு ஆகிய பிரதான கருமங்களுக்காக ஏற்படுகின்ற பிரதிகூலமான தாக்கத்தை குறைத்துக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.	- மேற்படி -